[2020 மார்ச் 18

சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, நாமக்கல் பகுதியிலிருக்கின்ற கோழி முட்டைகளானாலும் சரி, கறி கோழிகளானாலும் சரி, சாப்பிடுபவர்கள் யாருக்கும் இதுபோன்ற நோய்கள் வருவதில்லை என்பது சுகாதாரத் துறையினுடைய ஆய்வின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அச்சப்படத் தேவையில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்றது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

122—

ஆரம்ப சுகாதார நிலையம்

***54007—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, திருமுட்டம் ஒன்றியம், காவனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2020 மார்ச் 18]

புவனகிரி சட்டமன்றத் தொகுதி, காவனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கேற்ப, அரசு அந்தப் பகுதியிலே ஆய்வு செய்து, மக்கள் தொகைக்கேற்ப, வருங்காலங்களிலே அதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரணவன் அவர்கள்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். திருமுட்டம் ஒன்றியம், காவனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் துவங்குவதற்கு ஆய்வு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள கார்மாங்குடி கிராமத்திலே செயல்பட்டுவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டடம் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமையான கட்டடம். தற்போது அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்து, மேற்கூரை மற்றும் கட்டடத்தின் சுவரின் வெளிப்புறம் மற்றும் உட்புறங்களில் உள்ள சிமென்ட் கான்கிரீட் எல்லாம் பெயர்ந்து விழும் சூழ்நிலையில் உள்ளது. உள்ளே இருக்கும் கம்பிகள் எல்லாம் வெளியில் தெரியும் நிலையில் இருக்கின்றன. இக்கட்டடத்தில் உள்நோயாளிகள் பிரிவு, மருத்துவ அலுவலர் அறை, முதன்மை மருத்துவக் கிடங்கு, புறநோயாளிகள் பிரிவு, கழிவறை எனப் பல பிரிவுகள் இயங்கி வருகின்றன. இவையெல்லாம் இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளதால், இங்கு வரும் நோயாளிகள் எல்லாம் அச்சத்துடனே வந்து சிகிச்சை பெற்றுச் செல்லும் சூழ்நிலை இருக்கின்றது. புறநோயாளிகள் வந்து சிகிச்சை பெறும்போது, இடப் பற்றாக்குறையால், வெளியில் நிற்க வேண்டிய சூழ்நிலையும் உள்ளது. எனவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் புறநோயாளிகள் காத்திருப்போர் கூடம், பாதுகாப்பு கருதி சுற்றுச் சுவர் போன்றவற்றை அமைத்தும், காலியாகவுள்ள 4 செவிலியர் பணியிடங்களிலும், காலியாகவுள்ள 4 ஆய்வுக்கூட

Technicians பணியிடங்களிலும் உரியவர்களை பணி நியமனம் செய்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதியிலே, கங்கைகொண்டானில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டது. அதேபோன்று கம்மாபுரம், ஒரத்தூர், கிருஷ்ணாபுரம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தி தரப்பட்டிருக்கின்றன. தற்போது புதிய கட்டடம் வேண்டுமென்ற கோரிக்கைக்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்கிற சாதகமான பதிலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செவிலியர்களை நியமிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஏற்கெனவே Medical Recruitment Board–மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் தொடர்ந்து மக்கள் நல்வாழ்வுத் துறை பணி நியமனம் செய்து கொண்டிருக்கின்றது. இன்னும் ஓரிரு வாரங்களில் 1,500 Lab Technicians நியமனம் செய்ய இருக்கின்றோம், செவிலியர்களையும் நியமனம் செய்ய இருக்கிறோம். அப்போது, தங்களுடைய கோரிக்கையும் அந்த நியமனத்தின்மூலம் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. சேத்தியாதோப்பு பேரூராட்சி, தஞ்சாவூர்–விக்கிரவாண்டி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பேரூராட்சியாகும். மேலும், விருத்தாசலம்–புவனகிரி–பரங்கிப்பேட்டை வரை, தரம் உயர்த்தப்படவுள்ள அதிவேக நெடுஞ்சாலை இந்தப் பேரூராட்சி வழியாகச் செல்கிறது.

2020 மார்ச் 18]

இப்பேரூராட்சியிலிருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுமார் 400–க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் தினந்தோறும் வந்து சிகிச்சை பெறுகின்றனர். 50–க்கும் மேற்பட்ட உள் நோயாளிகளும் இங்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர். இந்தப் பேரூராட்சியின் அருகில் உள்ள தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலை மற்றும் சுற்றுப்புற வட்டாரங்களில் விபத்து ஏதேனும் ஏற்பட்டால், அவசரச் சிகிச்சைக்கு அவர்கள் வெகுதூரம் உள்ள நகரப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனால், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

புவனகிரி ஒன்றியத்தில், புவனகிரி பேரூராட்சியில் இயங்கி வந்த தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் 2016 ஆம் ஆண்டு தாலுகா தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டது. தற்போது, புவனகிரி ஒன்றியத்தில் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் என்பது கிடையாது. அரசின் கொள்கை முடிவின்படி ஓர் ஒன்றியத்திற்கு ஒரு தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் என்கிற அடிப்படையில், சேத்தியாதோப்பு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழ்நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலையில் எங்கெல்லாம் விபத்துகள் அதிகளவில் நடைபெறுகின்றன என்பதை போக்குவரத்துத் துறை மற்றும் காவல் துறைமூலம் உரிய கணக்கெடுத்து, விபத்துகள் அதிகளவில் நடக்கக்கூடிய இடங்களைக் கண்டறிந்து, அங்கு Accident Trauma Stabilisation Centre அதாவது விபத்து காய சிகிச்சை நிலைப்படுத்தும் மையங்களை அமைக்கும் ஒரு புதிய முயற்சியை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செய்து வருகிறது. இதற்கு நல்ல வரவேற்பும், நல்ல பலனும், இறப்பு சதவிகிதம் குறையக்கூடிய, ஒரு நல்ல result–ம் நமக்கு கிடைத்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், முதலில் தாம்பரத்தில் இதைச்

செய்தோம். பின்னர் பாடியநல்லூர், இ.சி.ஆர். சாலையில் உள்ள ஈஞ்சம்பாக்கம், மகாபலிபுரம் ஆகிய ஊர்களில் செய்தோம். இந்தப் பக்கம் பெங்களூரு சாலையில் ஸ்ரீபெரும்புதூரில் தொடங்கினோம். சமீபத்தில் தாங்கள் சார்ந்திருக்கிற கடலூர் மாவட்டம், வேப்பூரில் நானும், விருத்தாசல சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் தொடங்கி வைத்திருக்கிறோம். அதனால், விபத்து காய சிகிச்சை நிலைப்படுத்தும் மையம் என்பது வேறு, routine ஆக காய்ச்சல், இருமல், தலைவலி ஆகியவற்றிற்காக ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரக்கூடிய நிலை என்பது வேறு. தாங்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் விபத்து காய நிலைப்படுத்தும் மையம் அமைப்பதற்கு வாய்ப்பு இருப்பின், அரசு நிச்சயமாக ஆய்வு செய்து, உரிய சூழ்நிலை இருப்பின், விபத்து காய நிலைப்படுத்தும் மையத்தை அமைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும். தாங்கள் இரண்டாவதாகச் சொன்ன தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் கோரிக்கையையும் அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோதுகூட, தனியார் மருத்துவமனைகளுக்கு கொரோனாவை கட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்புகளை அரசு வழங்குமா என்று கேட்டிருந்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பேட்டியில்கூட "ஓரிரு நாட்களில் நாங்கள் அதைச் செய்வோம்" என்று தெரிவித்துள்ளார். தனியார் மருத்துவமனைகள் அதிகளவில் உள்ளதால், அம்மருத்துவமனைகளை முன்கூட்டியே பயன்படுத்திக் கொண்டால், அதைத் தடுப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன முயற்சிகளை, என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார் என்பது குறித்து இங்கே விளக்குவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 18]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்விதான். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, நான் இந்த அவையில் ஏற்கெனவே பதில் தெரிவித்ததுபோல, ஒரு நாளைக்கு ஒரு Testing Centre–ல், 100 நபர்களுக்கு கொரோனா வைரஸைக் கண்டறியக்கூடிய பரிசோதனையை மேற்கொள்ளலாம். இதுவரையில் 4 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. மேலும், இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில், ஐந்தாவது Testing Centre–க்கான approval Government of India–விலிருந்து கிடைத்துவிடும். We are expecting the orders today evening. நாளையிலிருந்து இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் Testing Centre செயல்படும். மொத்தம் 5 இடங்களில், ஒரு நாளைக்கு 500 samples–ஐ testing செய்யக்கூடிய capacity இருக்கிறது. Vellore CMC Hospital கூட request கொடுத்திருப்பதாக நேற்று மாண்புமிகு அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்கள் இங்கே தெரிவித்தார். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, தனியார் மருத்துவமனைகளில் குறிப்பாக Apollo Hospital மற்றும் பிற equipped மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் well equipped ஆக இருப்பதாலும் திறம்படச் செயல்படக்கூடிய capability இருப்பதனாலும் அவர்களுக்கும் approval வழங்கலாம் என்று அரசும் பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசினுடைய ICMR–தான் ஆய்வு செய்து, approval வழங்க வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, வெகு விரைவில், ஓரிரு நாட்களில், இந்த வாரத்திற்குள்ளாகவே தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், Corporate Hospitals–களிலும் கொரோனா வைரஸைக் கண்டறியக்கூடிய ஆய்வகங்கள் அமைப்பதற்குண்டான வாய்ப்புகள் இருக்கின்றன. We are expecting the orders from ICMR at the earliest. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதற்கான கட்டணம் குறித்தும் இங்கே கேட்டார். எவ்வளவு கட்டணம் செலுத்தப்பட வேண்டுமென்று அரசு நிச்சயமாக நிர்ணயிக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான தகவலையும் இந்த அவையில் இப்போது பதிவு செய்தால் நன்றாக இருக்குமென்று நான் கருதுகிறேன். நேற்று, இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில், நான் surprise ஆய்வு மேற்கொண்டபோது, யதார்த்தமாக அங்குள்ள மருத்துவர்கள் ஒரு youngster–ரிடம் பதற்றத்தோடு inspect செய்து

[2020 மார்ச் 18

கொண்டிருந்ததைப் பார்த்தேன். அப்போது, கொரோனா fever clinic–க்கு வந்திருக்கிறீர்களே, உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது? என்று அவரிடம் கேட்டோம். 'I am working in' என்று அவர் ஒரு company பெயரைச் சென்னார். அந்த company பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை. "நான், ஒரு MNC Company–ல் வேலை செய்கிறேன். எனக்கு cough இருக்கிறது" என்று அவர் சொன்னார். 'Cough இருக்கிறது சரி; உங்களுக்கு fever இருக்கிறதா?' என்று கேட்டால், 'இல்லை' என்று சொன்னார். 'உங்களுக்கு மூச்சுத் திணறல் இருக்கிறதா?' என்று கேட்டால், 'இல்லை' என்று சொன்னார். 'சமீபத்தில் வேறு எங்கேயாவது travel செய்திருக்கிறீர்களா?' என்று கேட்டால், 'இல்லை' என்று சொன்னார். 'கொரோனா பாதித்த நாடுகளுக்குச் சென்று வந்தீர்களா?' என்று கேட்டால், 'இல்லை' என்று சொன்னார். 'கொரோனா பாதித்த மாநிலங்களுக்கு சென்று வந்தீர்களா?' என்று கேட்டால், அதற்கும் 'இல்லை' என்று சொன்னார். 'பிறகு எதற்காக நீங்கள் பரிசோதனை மேற்கொள்ள வந்தீர்கள்?' என்று கேட்டால், "உங்களுக்கு cough இருப்பதனால் Government Hospital–க்குச் சென்று, பரிசோதனை மேற்கொண்டு வைரஸ் பாதிப்பு இல்லை என்று negative certificate வாங்கி வர வேண்டும்" என்று அவர் பணிபுரிகின்ற company–ல் சொல்லியிருக்கிறார்கள். அதுமாதிரியான ஒரு பதட்டம், அதாவது அரசு மருத்துவமனைக்கு வந்து, "samples வழங்கி, என்னை test செய்யுங்கள்" என்ற நிலை அவர்களுக்கு வேண்டியதில்லை என்பதற்காக இந்தக் கருத்தை நான் இங்கே பதிய வைத்தேன். பெரிய company–ல் இருக்கிறவர்கள், over crowding உள்ள, அதாவது 15,000–க்கு மேற்பட்ட மக்கள் வரக்கூடிய இராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு வர வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு அந்த exposure–ம் வேண்டியதில்லை. அதனால்தான் நான் தெளிவாகச் சொன்னேன். பத்திரிகை மற்றும் ஊடகங்களிலும் நான் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். Travel history, அதாவது கொரோனா வைரஸால் பாதிப்படைந்த நாடுகள், பாதிப்படைந்த மாநிலங்களுக்குச் சென்று வந்திருந்தாலோ அல்லது பாதிப்படைந்தவர்களோடு epidemiological link, அதாவது பாதிப்படைந்த ஒருவரோடு தொடர்பு வைத்திருந்தாலோ, அவர்களுக்கு இந்த மூன்று symptoms இருக்கும்பட்சத்திலும்கூட, மருத்துவர்களுடைய அறிவுரைப்படிதான் samples எடுக்க வேண்டும். எல்லோரும் samples கொடுக்க முன்வர வேண்டிய அவசியம் இல்லை என்கிற இந்த அவசியமான பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட இந்த கேள்விக்கான பதிலோடு

2020 மார்ச் 18]

சேர்த்து, இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, கொரோனா பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால்தான், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரம் எடுத்துக்கொண்டு, சரியான விளக்கங்களை இங்கே அளித்திருக்கிறார். இன்று காலை மற்றும் நேற்று இரவில் தொலைக்காட்சிகள் மற்றும் ஊடகங்களில், இராஜஸ்தான் மாநிலத்தில் இதற்கான மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகவும், அதுபோல, இன்று காலையில் அமெரிக்காவில் இதற்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இது அரசுக்குத் தெரியுமா? எனவே, இதுகுறித்து அரசு என்ன விளக்கத்தைத் தரப் போகிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–55

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஓர் ஆக்கப்பூர்வமான வினாவினை இங்கே எழுப்பியிருக்கிறார். எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் International Conference ஒன்று நடத்தப்பட்டது. அதில், 850 பேரை weblink–ல் எடுத்தோம். அதிலும் குறிப்பாக, நான் சொன்னதுபோல, Dr. Soumya Swaminathan, W.H.O.–வினுடைய Scientist, அட்லாண்டாவில் இருக்கக்கூடிய மருத்துவர்கள், அமெரிக்காவில் இருக்கக்கூடிய மருத்துவர்கள், அவர்கள் செய்யக்கூடிய Research Activity, அதாவது புதிய மருந்துகள் கண்டுபிடிப்பதற்கான தற்போதைய நிலை என்ன? உலக அளவில் இன்று என்ன நிலைமை? அந்த new inventory–யின் status என்ன என்பது பற்றி எல்லாம் அரசு தொடர்ந்து ஆய்வு செய்துகொண்டிருக்கின்றது. அதுபோல் நம்முடைய மருத்துவர்கள், Treating Doctors மூலம்

நாம் ஏற்கெனவே ஒருமுறை அதனைக் குணப்படுத்தியிருக்கிறோம். நேற்றுகூட பத்திரிகையில் ஒருவர் கேள்வி கேட்கிறார். 'சார், நீங்கள்தான் மருந்தே இல்லை என்று சொல்கிறீர்கள். அப்புறம் எப்படி குணப்படுத்தினீர்கள்' என்று கேட்கிறார். அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். There is no drug of choice. டாக்டர்களாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும், There is no drug of choice. இந்த நோய்க்கு இந்த மருந்து என்று இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதே நேரத்தில் supportive treatment and symptomatic treatment கொடுக்கிறோம். காய்ச்சலுக்கான மருந்து, இருமலுக்கான மருந்து, மூச்சுத்திணறலுக்கான மருந்துகளைக் கொடுத்து, supportive treatment கொடுத்து அவர்களுக்கு மருத்துவம் செய்கிறோம். அதனையும்தாண்டி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலாக, ஒரு drug combination–ஐ நம்முடைய மருத்துவர்களும் try செய்கிறார்கள். So ஏற்கெனவே பல Viral Diseases–க்கு கொடுக்கக்கூடிய drug–யும், வேறு சில, Research Activities–ல் இருப்பதால் Medical Ethics கருதி, அந்த மருந்துகளின் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. அதுமாதிரியான ஒரு drug combination–ஐ அந்த மருத்துவர்கள் trial basis–ல் கொடுப்பதற்குண்டான ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதுவும் தொடர்ந்து ஆய்வில் இருந்துகொண்டிருக்கின்றது. நிச்சயமாக மற்ற மாநிலங்களிலிருந்து வரக்கூடியவர்களையும், முன்வரக்கூடியவர்களையும் சேர்த்து நம் மருத்துவர்கள்மூலம் ஆய்வு செய்கிறோம். 'இதுபோல் ஒரு புது drug combination வந்திருக்கிறது' என்று இன்று காலையில்கூட என்னை வந்து சந்தித்தார்கள். உடனே சென்னை அரசு மருத்துவமனையிலுள்ள treating Doctors team–க்கும், King Institute–ல் இருக்கின்ற ஆராய்ச்சியாளர்களுக்கும் நாம் joint meeting–க்கு fix செய்துள்ளோம். ஒருபுறம் விழிப்புணர்வு நடவடிக்கை, இன்னொருபுறம் தடுப்பு நடவடிக்கை, இன்னொருபுறம் இதுபோன்ற ஒரு ஆய்வு நடவடிக்கை என பன்முக நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்துவருகிறது. விரைவில் நல்ல செய்தி வருகின்றபோது எல்லோருக்கும் நலமாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.